இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு

**டிஜிட்டல் பொருளாதார அமைச்சு**

**ஆட்களை பதிவுசெய்யும் திணைக்களம்**

# விலைமனுக்கோரல் (IFB)

## DRP தலைமை அலுவலகம், மாகாண அலுவலகங்கள் மற்றும் DS அலுவலகங்களிலுள்ள DRP பிரிவுகளில் 652 IP தொலைபேசிகளுடனான PABX அமைப்பிற்கான சேவை மற்றும் பராமரிப்பு ஒப்பந்தத்தைப் பெறுகை செய்தல் (ஒரு வருடத்திற்கு)

## IFB இலக்கம்: DRP/ACC/07/38/2026

1. DRP தலைமை அலுவலகம், மாகாண அலுவலகங்கள் மற்றும் DS அலுவலகங்களிலுள்ள DRP பிரிவுகளில் 652 IP தொலைபேசிகளுடனான PABX அமைப்பிற்கான சேவை மற்றும் பராமரிப்பு ஒப்பந்தத்தைப் பெறுகை செய்வதற்காக தகுதியான மற்றும் தகைமைபெற்ற விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை ஆட்களை பதிவுசெய்யும் திணைக்களத்தின் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் கோருகின்றார்.

2. விலைமனுக் கோரலானது தேசிய போட்டி விலைமனுக் கோரல் (NCB) முறை மூலம் நடத்தப்படும்.

3. ஆர்வமுள்ள மற்றும் தகுதியான விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை கணக்காளரிடமிருந்து (பெறுகை), ஆட்களை பதிவுசெய்யும் திணைக்களம், சுஹுருபாய, பத்தரமுல்ல எனும் முகவரியில் 011-5226172 எனும் தொலைபேசி இலக்கம் மூலம் வேலை நாட்களில், மு.ப 9.00 மணி முதல் பி.ப 3.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம். விலைமனு ஆவணங்களை கணக்குக் கிளையில், ஆட்களை பதிவுசெய்யும் திணைக்களம், C பிரிவு, 12 ஆம் மாடி, “சுஹுருபாய”, ஸ்ரீ சுபூத்திபுர வீதி, பத்தரமுல்ல எனும் முகவரியில் 24.08.2026 முதல் 07.09.2026 வரை இலவசமாகப் பார்வையிடலாம். அத்துடன் திணைக்களத்தின் இணையதளம் (www.drp.gov.lk) மூலமும் பார்வையிடலாம்.

4. பூரணப்படுத்தப்பட்ட ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணத் தொகுதியை, ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கணக்காளரிடம் (பெறுகை), ஆட்களை பதிவுசெய்யும் திணைக்களம், C பிரிவு, 12 ஆம் மாடி, “சுஹுருபாய”, ஸ்ரீ சுபூத்திபுர வீதி, பத்தரமுல்ல எனும் முகவரியில் எழுத்துமூல விண்ணப்பத்தைச் சமர்ப்பித்து, 24.08.2026 முதல் 07.09.2026 வரை உள்ள வேலை நாட்களில் மு.ப 9.00 மணிக்கும் பி.ப 3.00 மணிக்கும் இடைப்பட்ட காலத்தில் மீளளிக்கப்படாத கட்டணமான இலங்கை ரூபாய் மூவாயிரத்து ஐந்நூறை (3,500/-) செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். செலுத்தும் முறை ரொக்கப் பணமாக இருக்க வேண்டும்.

5. விலைமனுக்கள் “மூலம்” (Original) மற்றும் “பிரதி” (Copy) என இரு படிகளாகக் குறிக்கப்பட்டு, ஒரே முத்திரையிடப்பட்ட உறையில் பத்தி 3 இல் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு விநியோகிக்கப்பட வேண்டும் அல்லது கணக்குக் கிளை, ஆட்களை பதிவுசெய்யும் திணைக்களம், C பிரிவு, 12 ஆம் மாடி, “சுஹுருபாய”, ஸ்ரீ சுபூத்திபுர வீதி, பத்தரமுல்ல எனும் முகவரியில் வைக்கப்பட்டுள்ள டெண்டர் பெட்டியில் 08.09.2026 அன்று பி.ப 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் வைப்பிலிடப்பட வேண்டும். விலைமனுக்கள், விலைமனு சமர்ப்பிக்கும் கடைசி திகதியிலிருந்து எழுபத்தேழு (77) நாட்கள் வரை அல்லது கொள்வனவு செய்பவரால் குறிப்பிடப்படும் நீடிக்கப்பட்ட திகதி வரை செல்லுபடியாகும். தாமதமாகி வரும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் மூடப்பட்டு உடனடியாக, வருகை தர விரும்பும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

6. ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் விலைமனுவின் IFB இலக்கம் என்பன விலைமனு உறையின் மேல் இடது மூலையில் குறிப்பிடப்பட வேண்டும். அனைத்து விலைமனுக்களுடன் இலங்கையில் இயங்கும் ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியினால் வழங்கப்பட்டதும், இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதுமான இலங்கை ரூபாய் ஒரு இலட்சத்து முப்பத்தைந்தாயிரம் (135,000/-) விலைமனுப் பிணை (Bid Security) சமர்ப்பிக்கப்பட வேண்டும். இது ஆணையாளர் நாயகத்தின் பெயரில் எழுதப்பட்டு கோரப்பட்டவுடன் உடனடியாக ரொக்கமாக்கக்கூடியதாக இருக்க வேண்டும் விலைமனுப் பிணையானது 08.09.2026 முதல் 24.11.2026 வரை செல்லுபடியாகும் அல்லது DRP இன் காசாளரிடம் மீளளிக்கப்படும் ரொக்க வைப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

7. வெற்றிபெறும் விலைமனுதாரர் 12.10.2026 இலிருந்து சேவையைத் தொடங்க வேண்டும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**ஆட்களை பதிவுசெய்யும் திணைக்களம்,**
**12 ஆம் மாடி, ”சுஹுருபாய”,**
**ஸ்ரீ சுபூத்திபுரவீதி,**
**பத்தரமுல்ல.**